## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

## GEOS 3103 புவியியற் சிந்தனை வரலாறும் ஆய்வு நுட்பங்களும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

யாதாயினும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

உலக புறவரிப்படம் வழங்கப்படும்
எழுத்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்

---

01.(அ) புவியியற் சிந்தனை வளர்ச்சியில் பங்காற்றிய ஆரம்பகால மக்கள் இனக் குழுக்களை அடையாளங்காட்டி இவ் இனக்குழுக்களின் குடியேற்ற அமைவிடங்களை உலக புறவரிப்படத்தில் குறித்துக்காட்டுக.

(08 புள்ளிகள்)

(ஆ) உம்மால் குறித்துக்காட்டப்பட்ட இனக்குழுக்கள் புவியியற் சிந்தனை வரலாற்றில் முக்கியத்துவப்படுத்தப்படுவதற்கான காரணங்களைத் தகுந்த ஆதாரங்களைக் காட்டி விளக்குக.

(17 புள்ளிகள்)

02. "புவியியற் கல்வி வளர்ச்சி வரலாற்றில் அரேபியர் காலம் ஒரு பொற்காலமாகக் கருதப்படக்கூடியது." என்ற கருத்தினை நீர் ஏற்றுக்கொள்வீரா? தகுந்த உதாரணங்கள், ஆதாரங்களின் துணை கொண்டு விளக்குக.

(25 புள்ளிகள்)

03.(அ) நீர் அறிந்துள்ள புவியியற் சிந்தனைக் கலைக்கூடங்கள் (2) இரண்டினைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

(ஆ) உம்மால் குறித்துக் காட்டப்பட்டுள்ள கலைக்கூடங்கள் எவ்வகையில் புவியியல் கல்வி வளர்ச்சிக்கு பங்காற்றியுள்ளன என்பதனை மதிப்பிடுக.

(20 புள்ளிகள்)

04. கிறிஸ்தோபர் கொலம்பஸ் புவியியற் சிந்தனை வரலாற்றில் தடம் பதிந்த ஒருவராகக் கொள்ளப்படுவதற்கான காரணங்களை நுணுகி ஆராய்க.

(25 புள்ளிகள்)

05. ஆரம்பகால புவியியலுக்கும், 20 நூற்றாண்டுப் புவியியலுக்கும் இடையே ஒ நீர்ப்பிரிமேடையாக மத்தியகாலம் திகழ்வதற்கான காரணங்களை உதாரணங்களுடன் விளக்குக.

(25 புள்ளிகள்

06. பின்வருவனவற்றுள் யாதாயினும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பெழுதுக.

1) ஹோமரின் புவியியல் தொண்டு
2) மானிட ஆதிக்கவாதமும், சூழல் ஆதிக்கவாதமும்
3) ஐரோப்பிய கலாசாரத்தின் பிறப்பிடங்கள்

(12 ½ X 2 புள்ளிகள்